# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை 24.09.2024 கதிர் 370







# பிரதமராகப் பதவியேற்றார் கலாநிதி ஹறிணி அமரசூரிய

இலங்கை சோசலிசக் குடியரசின் புதிய பிரதமராக தேசிய மக்கள் சகத்தியின் கலாநிதி ஹறிணி அமரசூரிய இன்று மாலை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கை வரலாற்றில் பிரதமராக பதவியேற்கும் மூன்றாவது பெண்மணி என்ற பெருமையை ஹறிணி அமரசூரிய பெற்றுள்ளார்.

முன்னதாக சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் இந்த நாட்டின் பிரதமர்களாக பதவி வகித்துள்ளனர்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஒன்பதாவது நாடாளுமன்றத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக 2020 இல் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவு செய்யப்பட்டார்.

6➤



# பிரதமர் வேட்பாளராக சஜித் ஐக்கிய மக்கள் சக்தி முடிவு



எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான 'ஐக்கிய மக்கள் சக்தியின்' பிரதமர் வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த முடிவு கட்சி கூட்டத்தில் ஒருமனதாக எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும் சஜித் பிரேமதாச தெளிவுபடுத்தியுள்ளார்.

இந் நிலையில், பொது தேர்தலை இலக்கு வைத்து பிரச்சாரம் செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தயாராகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்த அனைவருக்கும் சஜித் பிரேமதாச நன்றி தெரிவித்துள்ளார்.

6➤

# பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் தயார்

## ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு




நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வரும் நிலையில், அது தொடர்பான கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்,

'பொதுத் தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இதுவரை தேர்தல்கள் ஆணைக்குழுவை உத்தியோகபூர்வமாக தொடர்பு கொள்ளவில்லை. இருப்பினும், அது எப்போது நடக்கும் என்பதற்கான தீர்மானங்கள் ஏற்கனவே முன்னெடுக்கபட்டுள்ளன.

"நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன், வேட்பாளர்கள் வேட்புமனுக்களை 7 முதல் 17 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். அதன் பின்னர் ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம்

6➤

# நாடாளுமன்றம் இன்றிரவு கலைப்பு? டிசெம்பர் முதல் வாரத்தில் தேர்தல்!

நாடாளுமன்றம் இன்று இரவு கலைக்கப்படும் என்றும், எதிர்வரும் டிசெம்பருக்குள் பொது தேர்தல் நடத்தப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார உள்ளிட்ட நால்வர் அடங்கிய அமைச்சரவை இன்று நியமிக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வட்டாங்கள் தெரிவித துள்ளனர்.

இதன்படி, ஜனாதிபதி அநுரகுமார சுற்றுலா, பாதுகாப்பு, நிதி, நீதி, கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுகளையும், பிரதமர் வெளியுறவு, கல்வி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுகளையும் வைத்திருப்பார்கள் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹறிணி அமரசூரிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மேலும், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் லக்ஷ்மன் நிபுண ஆராச்சி ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

நாடாளுமன்ற கலைக்கப்பட்ட பின்னர், டிசம்பரில் பொது தேர்தல் நடத்தப்படும் எனவும் அதன் பின்னர் புதிய நாடாளுமன்றம் கூடும் திகதியை ஜனாதிபதி அறிவிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாளத் தலைநகரில் கோட்டாபய ராஜபக்ஷ

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நாட்டை விட்டு அவசரமாக வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தற்போது நேபாள தலைநகர் காட்மாண்டுவில் இருப்பதாக அங்கிருந்து வெளிவரும் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இலங்கையில் இருந்து வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ இந்தியா சென்று பின்னர் அங்கிருந்து பூட்டான் தலைநகரம் திம்புவுக்குச் சென்றதாகவும், இப்போது அங்கிருந்து நேபாளத்துக்கு சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டப்பாய் ராஜபக்ஷவும் அவரது



மனைவியும் நேற்று திங்கட்கிழமை காலை நேபாள தலைநகரை சென்றடைந்தனர்.

6➤

# ஜனாதிபதித் தேர்தலுடன் தப்பிச் சென்றோர் விபரம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து நாட்டை விட்டு தப்பியோடியவர்களின் விபரத்தை கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை வெளியான அந்த இணையத்தளத்தின் செய்தியின் விபரம்:கட்டுநாயக்க பண்டாரநாயக்க அனைத்துலக வானூர்தி நிலையத்தை சுற்றி விமானப் படையினர் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கான காரணம், ஜனாதிபதித் அநுரகுமார திசநாயக்கவின் வெற்றியுடன், நாட்டில் இருந்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்குவோர் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

பெருமளவிலான அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டை விட்டு வெளியேறியோர் விபரம்:

முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே - சென்னைக்கு, இந்தியா

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார - தாய்லாந்தின் பாங்கொக்

இத்தேகண்டே சத்தாதிஸ்ஸ தேரர் -ஹொங்கோங்

நாமல் ராஜபக்சவின் மனைவி லிமினி வினோஜா வீரசிங்க மற்றும் அவரது தந்தை திலகசிறி வீரசிங்க - துபாய்

நாமல் ராஜபக்சவின் மனைவியின் தாயார் மற்றும் நாமல் ராஜபக்ஷவின் இரண்டு பிள்ளைகள் - துபாய் - அமெரிக்கா

உமாண்டாவின் சமந்த பத்ர தேரோ - தென்கொரியா

கோட்டாபய ராஜபக்ஷ - இந்தியா - பூட்டான்-நேபாளம்

பசில் ராஜபக்ஷ -துபாய் - அமெரிக்கா

பாடகர் இராஜ் வீரரத்ன - ஜப்பான்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொன்விழா ஆண்டை முன்னிட்டு யாழ் பல்கலையில் 3 நாள் நிகழ்வு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்வுகளின் வரிசையாக உலக சுற்றுலா தினத்தினை "சுற்றுலாவும் அமைதியும்" என்ற தொனிப்பொருளில் இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்து சிறப்பிக்கும் முகமாக முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகள், செப்டெம்பர் 27ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெற இருப்பதோடு செப்டெம்பர் 27 - 29ஆம் திகதி வரை காலை 10 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை, கலாசாரத் திருவிழா, மாணவர்களின் உணவுச்சந்தை போன்றன யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறக் காத்திருக்கின்றது.

முதலாம் நாள் நிகழ்வு "சுற்றுலாவும் அமைதியும்" என்ற தொனிப்பொருளில் ஆய்வரங்காக நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் ஆராத சுருதி உரையினை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியர் பிறேம குமார டி சில்வா அவர்கள் நிகழ்த்தவுள்ளார். மற்றுமொரு ஆராதசுருதி உரையினை Jetiwng Sym-ony குழுமத்தின் தலைவர் கிரான் குரே அவர்கள் தரவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் கலந்துரையாடலில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் தலைவரும் பேராசிரியருமான சு.ஊ அனு சந்திரன் அவர்களும், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சுற்றுலாத் துறைக் கலாநிதி வெங்கட் ராவோ அவர்களும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கற்கைகளின் தலைவர் கலாநிதி பத்மநேசன் அவர்களும் வழங்குவார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த பேராசிரியர்களால் வடமாகாண சுற்றுலா மற்றும் தொழில்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தொழில திறன் மேம்படுத்தல் செயலமர்வுகள் நடைபெற உள்ளன.

மூன்றாம் நாள் நிகழ்வுகளாக கலைநிகழ்வுகளும் பண்பாட்டு அமர்வுகளும் இடம்பெற உள்ளன.

இந்த நிகழ்வுகளுக்கு சமாந்தரமாக செப்ரம்பர் 27ம் திகதி " 29ம் திகதி வரை காலை 10 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை சிறிய நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சிகளும் சந்தையும் நடைபெற உள்ளன. அத்தோடு இம் மூன்று நாட்களும் மாலை 6 தொடக்கம் இரவு 9 மணி வரை கைலாசபதி கலையரங்கில கலைநிகழ்வுகளும் நடைபெற இருக்கின்றன.



# ஜனாதிபதி இன்று மக்களுக்கு உரை

ஜனாதிபதி அனுர திஸாநாயக்க இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றி விசேட அறிவிப்பொன்றை வெளியிட உள்ளார்.

அங்கு புதிய அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களை ஜனாதிபதி அறிவிக்க உள்ளார்.

# கிழக்கு ஆளுநரும் இராஜினாமா

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமானும் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அத்துடன் மத்திய, வடமேல், வடமத்திய, ஊவா, சப்ரகமுவ, தென், வடக்கு மற்றும் மேல் ஆகிய மாகாணங்களின் ஆளுநர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இந்நிலையில், 9 மாகாணங்களுக்கும் விரைவில் புதிய ஆளுநர்களைப் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமிக்கவுள்ளார்.



# பொதுத் தேர்தலில் ரணில் குதிப்பாரா?

## இல்லை என்கின்றது ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியல் ஊடாகவேனும் அவர் நாடாளுமன்றம் வரமாட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும், நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி மற்றும் கூட்டணியை அவர் வழிநடத்துவார் என்றும் ருவான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# பொதுத் தேர்தலை தேசியக் கட்சிகள் ஓரணியாக எதிர்கொள்ள வேண்டும்

## அழைப்பு விடுக்கின்றார் அரியநேத்திரன்



'வடக்கு கிழக்கில் சில தமிழர்களே பல கட்சிகளில் இருந்து தமிழ் தேசிய அரசியலை தோற்கடிப்பதற்காக பல முயற்சிகளையும் பல பிரசாரங் களையும் செய்த போது அவர்களை முறியடித்து இந்த தேர்தலில் மக்கள் வாக்களித்துள்ளனர்" என்று தெரிவித்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட பா.அரிய நேத்திரன், "எனவே ஜனாதிபதி தேர்தலில் பிரிந்து இருந்தாலும் அந்த முரண்பாடுகளை தவிர்த்து நாடாளு மன்றத்தேர்தலில்ஒரு குடையின் கீழ்ஒரு அணியில் ஒரு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்" என்று பகிரங்க அழைப்பினை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த பகிரங்க அழைப்பை அரியநேத்திரன் விடுத்தார்.

"இந்த தேர்தலில் தமிழ்த் தேசியத்தை நிலை நாட்டுவதற்காக ஒன்றிணைக்கப்பட்டு இந்த பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு இருக்கின்றார்" என்று சுட்டிக்காட்டிய அரிய நேத்திரன், "இந்நிலையில் மிகவிரைவில்ஒருநாடாளும மன்ற தேர்தல் இடம் பெற இருப்பதால், நாங்கள் தமிழ்த் தேசிய அரசியலை மையப்படுத்துகின்ற சகல கட்சிகளும் ஒரு அணியில் ஒருகுடையின்கீழ்நின்று இந்த தேர்தலை எதிர்கொள்வோமாக இருந்தால் மாத்திரம் தான் எங்களின் பிரதி நிதித்துவத்தை அதிகரிக்கக் கூடிய தாக இருக்கும்" என்றும் அவர் சுட்டிக்காட்டியார்.

"கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் அம்பாறை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் ஒரு பிரதிநிதித்துவத்தை இழந்திருந்தோம்" என்று தெரிவித்த அரியநேத்திரன், "இப்பொழுது திருகோணமலை மாவட்டத்தை பார்க்கின்றபோது அவ்வாறான நிலையை தான் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே சகல தமிழ் தேசிய கட்சிகளும் ஒரு கொள்கை அடிப்படையில் ஒரு குடையின் கீழ் ஒரு சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது" என்றும் அரியநேத்திரன் வலியுறுத்தினார்.




# பொது வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளும் தேசியத்துக்கானவை

## வலியுறுத்துகிறார் கஜேந்திரகுமார்



"தமிழ்ப்பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தமிழ்த்தேசியத்துக்கானவையே" என்றும், "அத்துடன், 30 சத வீதமான தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்" என்றும் கூறியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செயயப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு ஒரு வேண்டுகோளை விடுப்பதாகத் தெரிவித்த கஜேந்திரகுமார், "தென்னிலங்கை மக்கள் எவ்வாறு கடந்தகால அரசியல் தலைமைகளை புறந்தள்ளி மாற்றத்தை விரும்பினார்களோ அதையே தமிழ்த் தேசமும் விரும்புகிறது" என்றும் "ஒற்றையாட்சி முறையை தவிர்த்து சமஷ்டியை முன்னிறுத்தும் ஆட்சியையே நங்கள் எதிர்பார்க்கின்றோம்" என்றும் தெரிவித்திருக்கின்றார்.

"நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில், வடக்கு மக்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்வைத்த நிலைப்பாட்டுக்கு ஆதரவளித்திருந்தாலும் ஒப்பீட்டளவில் தமிழ் மக்கள் பொதுவேட்பாளருக்கு அளித்த ஆதரவு மூலம் தமிழ்த் தேசியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர்" என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

# மாற்றத்தை விரும்பும் மக்களுக்கு அநுரவின் வருகை நம்பிக்கை ஒளி

## முன்னாள் எம்பி சந்திரகுமார்



இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தாங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாவது மாற்றத்தை விரும்பும் மக்களிடம் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருக்கிறது எனத் தெரிவித்துள்ள முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளருமான மு. சந்திரகுமார் புதிய ஜனாதிபதிக்கு சமத்துவக் கட்சியின் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்

நடந்துமுடிந்த ஜனாதிபதி தேர்தலில், வரலாற்று வெற்றியொன்றை தம்வசப்படுத்தி, இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக தேர்வாகியிருக்கும் தங்களுக்கு, சமத்துவ கட்சியின் சார்பில் வாழ்த்துக்கள் . அரசியல் மாற்றம் ஒன்றை வேண்டி பல்வேறு தசாப்தங்களாக காத்திருக்கும் இலங்கையர்களுக்கு, தங்களது வருகை, நம்பிக்கையின் ஒளியை வீசி சென்றிருக்கிறது. ஈழத்திருநாட்டை, இந்து சமுத்திரத்தின் செழுமைமிகு நாடாக மீளக்கட்டியெழுப்பும் தங்களது முயற்சிகளுக்கு,எமது கட்சியின் ஆதரவும், ஆசிர்வாதமும் எப்போதும் இருக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறோம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதையல் தோண்டிய தேரர் உட்பட 9 பேர் கைது

வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வந்துரவ பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக கூறப்படும் தேரர் உட்பட 9 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

வெயாங்கொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான தேரர் வெயாங்கொடை பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்கள் ஆனமடுவ, சூரியவெவ, எம்பிலிப்பிட்டிய, மினுவாங்கொடை மற்றும் வெயாங்கொடை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெயாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சஜித் தோல்விக்கு காரணம் என்ன?

**இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக சஜித்தின் செயல்பாடுகள் கவனிக்கத் தக்கவையாகவே இருந்தன. பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை, அவர் உலகமயமாக்கலுடன், உள்ளூர் மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களிலும் கவனம் செலுத்த விரும்புகிறார்.**

**முரளிதரன் காசிவிஸ்வநாதன்**

தந்தையின் படுகொலைக்குப் பிறகு அரசியலில் நுழைந்த சஜித் பிரேமதாஸ, இலங்கை அரசியலின் ஏற்ற இறக்கங்களில் 30 ஆண்டுகளாகப் பயணம் செய்தவர்.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் முக்கியப் போட்டியாளர்களில் ஒருவராக இருந்த சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் எனப் பல பதவிகளை வகித்தவர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் தோல்வியடைந்த சஜித், இந்த முறை கூடுதல் நம்பிக்கையுடன் களம் இறங்கி இருந்தாலும், அவரால் வெற்றிபெற முடியவில்லை.

“திஸாநாயக்க ஜேவிபிக்கு கிடைத்த வெற்றியாகப் பார்க்கக்கூடாது. இலங்கையின் பாரம்பரிய, பழைய அரசியல் கட்சிகள் மீது, பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மக்களிடையே ஒரு வெறுப்பு இருக்கிறது. அப்படியிருக்கும் சூழலில், அநுர குமார ஒரு நல்ல தேர்வாகத் தெரிகிறது. ஆகையால் அவருக்கு வாக்களிக்கிறார்கள்.

அதேநேரம், சஜித்தை பொறுத்தவரை, அவர் ஐக்கிய தேசிய கட்சியை விட்டு வெளியே வந்து, ஒரு புதிய கட்சியை உருவாக்கியிருந்தாலும், பழைய ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியே வந்தவர்கள்தான் இந்தப் புதிய கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலும் இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இந்தக் கட்சியும் ஒரு பழைய அரசியல் சக்தியாகவே மக்கள் மத்தியில் பார்க்கப்படுகிறது. ஆகையால், மக்கள் அவரைப் பெரியளவில் தேர்வு செய்யவில்லை,” என்கிறார் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம்.

பிற்காலத்தில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இரண்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணசிங்க பிரேமதாஸ, ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவும் அரசின் தலைமைக் கொறடாவாகவும் இருந்த காலத்தில், அவருக்கும் ஹேமா விக்ரமதுங்கேவுக்கும் 1967 செப்டம்பர் 12ஆம் தேதி பிறந்தார் சஜித் பிரேமதாஸ.

செயின்ட் தாமஸ் பிரிபரேட்டரி பள்ளி, கொழும்புவில் உள்ள ராயல் கல்லூரி, லண்டனில் உள்ள மில் ஹில் ஸ்கூல் ஆகியவற்றில் படித்தார் சஜித். இவருக்குப் பத்து வயதாக இருக்கும்போதே, இவருடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸ, இலங்கையின் பிரதமராகிவிட்டார்.

இருந்தாலும் சஜித்தின் படிப்பு தொடர்ந்தது. லண்டன் பொருளாதாரப் பள்ளியிலும் லண்டன் பல்கலைக் கழகத்திலும் படித்த சஜித், மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தில் பொது மேலாண்மையில் முதுகலை படிப்பில் சேர்ந்தார். இதற்கிடையில் ரணசிங்க பிரேமதாஸ இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அடுத்த சில ஆண்டுகளிலேயே, 1993இல் ஒரு தற்கொலைப் படை தாக்குதலில் கொல்லப்பட்டார் பிரேமதாஸ. இதையடுத்து அமெரிக்காவில் இருந்து சஜித் நாடு திரும்பினார்.

தந்தையைப் போலவே அரசியலில் ஈடுபட விரும்பிய சஜித், 1994இல் தனது தந்தை இருந்த கட்சியான ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்தார். அவருக்கு அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாவட்ட அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டது. சிறிய பொறுப்புதான் என்றாலும் சின்னச் சின்ன நிகழ்சிகளை நடத்தி விறுவிறுப்புடன் செயல்பட்டார் சஜித். அந்த மாவட்டத்தில் தருண சவிய என்ற இளைஞர் இயக்கத்தையும் வறுமை ஒழிப்பிற்காக சன சுவய போன்ற அமைப்புகளையும் கட்டியெழுப்பினார்.

கடந்த 2000வது ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் வாய்ப்பு சஜித்திற்கு அளிக்கப்பட்டது. அதில் பெரும் வெற்றி பெற்றார் சஜித். அதற்குப் பிறகு, 2001, 2004, 2010, 2015 ஆகிய தேர்தல்களிலும் வெற்றி பெற்றார்.

கடந்த 2001இல் ரணில் விக்ரமசிங்க பிரதமரானபோது, அவரது அமைச்சரவையில் சுகாதாரத் துறை துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2011இல் ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவராகவும் தேர்வானார் சஜித்.

கடந்த 2015இல் மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியாகத் தேர்வானதும், சஜித் வீட்டு வசதி மற்றும் சமிர்தி திட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் கீழ் மத்தியதர மக்களுக்காகப் பல வீட்டு வசதித் திட்டங்களை முன்னெடுத்தார் சஜித்.

கடந்த 2010, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி நேரடியாகப் போட்டியிடவில்லை. மாறாக பொது வேட்பாளர்களை ஆதரித்தது. 2015இல் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஆனால், விரைவிலேயே ரணிலுக்கும் சிறிசேனவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இது 2018இல் ஒரு மிகப பெரிய அரசியல் சாஸன சிக்கலுக்கு இட்டுச் சென்றது. அந்தப் பிரச்சனை பிறகு தீர்க்கப்பட்டாலும், 2015இல் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தது தவறு எனக் கருதியது ஐக்கிய தேசியக் கட்சி. இதனால், 2019இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்பினார். ஆனால், மங்கள சமரவீர, ஹரின் ஃபெர்னாண்டோ போன்றவர்கள் சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட வேண்டும் எனக் கூறினர். சில நாட்கள் இழுபறிக்குப் பிறகு, சஜித்தை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக ஏற்க ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டார். அந்தத் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டு 41 சதவீத வாக்குகளைப் பெற்றார் சஜித்.

விரைவிலேயே எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார் சஜித். இந்நிலையில் அவரை பிரதமர் பதவிக்கான போட்டியில் நிறுத்த விரும்பியது ஐக்கிய தேசியக் கட்சி. 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட சமாகி ஜன பலவெகய என்ற முன்னணியை உருவாக்கினார் சஜித். இந்த முன்னணிக்கு அன்னப் பறவையின் சின்னம் ஒதுக்கப்பட்டது. இதில் போட்டியிட ரணில் ஒப்புக்கொண்டார். ஆனால், இறுதி நேரத்தில் சஜித் ஆதரவாளர்கள், வேறு சின்னத்தில் போட்டியிட்டனர். இதனால், கட்சி பிளவடைந்தது.

அந்தத் தேர்தலில் 54 இடங்களைப் பிடித்த சமாகி ஜன பலவெகயவின் சார்பில் சஜித் எதிர்க்கட்சித் தலைவரானார். 2024 ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த முன்னணியின் சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட களத்தில் இறங்கினார் சஜித்.

“தந்தையின் நிழலில் அரசியலுக்கு வந்தவர் சஜித். அவருடைய பேச்சுகள், பேட்டிகள் ஆகியவை அவர் அந்த நிழலை விட்டு வெளியேறவில்லையோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. 2022 நெருக்கடியின்போது ஜனாதிபதி பதவியை ஏற்க மறுத்தார். பதவியை ஏற்றுக்கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் காட்டியிருக்க வேண்டும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை” என்கிறார் பிபிசி சிங்களப் பிரிவின் ஆசிரியரான இஷாரா தனசேகர.

இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக அவருடைய செயல்பாடுகள் கவனிக்கத் தக்கவையாகவே இருந்தன. பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை, அவர் உலகமயமாக்கலுடன், உள்ளூர் மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களிலும் கவனம் செலுத்த விரும்புகிறார். “பொருளாதாரத்தைச் சீர்திருத்தி, அதைப் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்டதாகவும் மாற்ற வேண்டும். இது மக்களிடையே செல்வத்தை உருவாக்கும். பாதிக்கப்படக்கூடிய நபர்களைப் பாதுகாப்பதற்காக இலக்கு வைக்கப்பட்ட மானியங்களுடன் கூடிய வலுவான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு மூலம் பொருளாதார நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும்” என அவருடைய தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழர் பிரச்னைக்கான தீர்வைப் பொறுத்தவரை, 13வது சட்டத் திருத்தத்தை முழுமையாகச் செயல்படுத்துவதையே முன்வைக்கிறார் சஜித்.

கடந்த ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் தமிழ் தலைவர்களைச் சந்தித்த பிறகு பேசிய அவர், தான் ஜனாதிபதியானால் 13வது சட்டத் திருத்தத்தை முழுமையாகச் செயல்படுத்தப் போவதாகத் தெரிவத்தார். ‘சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் புலிகளைவிட சக்தி வாய்ந்த பயங்கரவாத அமைப்பை உருவாக்கவே இது உதவும்’ என பிவிதுரு ஹெல உருமய போன்ற அமைப்புகள் குற்றம் சாட்டியபோதும் அவர் அதிலிருந்து பின்வாங்கவில்லை. இதனால் இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிப்பதாக அறிவித்தது. வடக்கிலும் கிழக்கிலும் மேலும் பல கட்சிகள் இவருக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தன. தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போதும், முதல் விருப்ப வாக்குகளில் இந்தப் பகுதிகளில் சஜித்திற்கு கூடுதலான ஆதரவு இருப்பது தெளிவாகவே தெரிந்தது.

இந்தியாவை பொறுத்தவரை, எப்போதும் இந்தியாவை சந்தேகத்துடன் பார்க்கும் ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸாநாயக்கவைவிட, ஆரம்பத்திலிருந்தே சீனாவைவிட இந்தியாவை நெருக்கமாகக் கருதும் சஜித்தை கூடுதலாக விரும்பக்கூடும். இந்த நிலையில், தோல்வி அடைந்திருந்தாலும், சஜித்திற்கு இதுவொரு முக்கியமான தேர்தல்.

# பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பதற்கு அநுர குமரவின் வெற்றி பயன்பட வேண்டும்

## வாழ்த்துச் செய்தியில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு





இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள அநுரகுமார திசநாயக்க, புரையோடிப்போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் கண்டு நாட்டை சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் முன்கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடதுசாரி தலைவரான தோழர் அநுரவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் விடுத்துள்ள அறிக்கையின் விபரமும் வருமாறு:

'இலங்கையில் முதன்முறையாக மார்க்சிய லெனினிய சிந்தனையைக் கொண்ட இடதுசாரி கட்சியொன்றின் தலைவர் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். 56 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று இந்த நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுரகுமார பொறுப்பேற்றுள்ளார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். ஒருபுறம் பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள நாடு. இலஞ்சம் ஊழல். மறுபுறம் முப்பது வருடங்களாக நடைபெற்ற பாரிய யுத்தம். இதனால் ஏற்பட்ட இழப்புகளும் பொருளாதார அழிவுகளும் இவை அனைத்தையும் தீர்த்து வைக்க வேண்டிய ஒரு பொறுப்பிலும் நீங்கள் இருக்கின்றீர்கள். இன, மத பேதமில்லாமல் நாமெல்லோரும் இலங்கையர்கள் என்ற வகையில் நாம் செயற்பட வேண்டும் என்றும் நீங்கள் கருத்து தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால் இந்த நாடு நூற்றாண்டு காலமாக இன, மத, மொழி ரீதியாக பிரிந்து போயிருக்கின்றது. பௌத்தத்திற்கு முதலிடம், சிங்களத்திற்கு சிறப்பு அந்தஸ்த்து, பௌத்தத்திற்கு முதலிடம் என்ற பெயரில் முப்படைகளையும் பயன்படுத்தி தமிழர் பகுதிகளில் புதியபுதிய புத்த விகாரைகளை அமைக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் போன்றவை தொடர்கதையாகத் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில், சமத்துவமோ, புரிந்துணர்வோ எவ்வாறு ஏற்படும் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நாம் நம்புகிறோம்.

அது மட்டுமன்றி, இந்த நாட்டை பொருளாதார ரீதியாக வளப்படுத்த வேண்டுமாக இருந்தால் அதற்கான சர்வதேச முதலீடுகளை நாங்கள் கொண்டுவர வேண்டுமென நாங்கள் விரும்பினால் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஒன்று ஏற்பட வேண்டும். அந்த அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டுமாக இருந்தால், நீண்டகாலமாக இழுபறி பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும். இவை இல்லாமல் பொருளாதார முன்னேற்றங்களோ அபிவிருத்தியோ ஏற்படுவது மிகக்கடினமான ஒரு செயற்பாடாகும்.

மார்க்சிய லெனினிய சிந்தனையில் வளர்ந்து வந்துள்ள நீங்கள் ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அவர்கள் சுயாட்சியுடன் வாழ்வதற்கான அடிப்படைகளையும் மற்றவர்களைவிட தெளிவாகப் புரிந்திருப்பீர்கள் என நாங்கள் நம்புகிறோம். ஆகவே அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் துணையாக இருப்போம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஜனநாயக ரீதியில் முதன்முறையாக ஒரு இடதுசாரிக் கட்சியாக நீங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருக்கின்றீர்கள். ஆகவே அந்த வகையில் நீண்டகாலமாக இழுபறிபட்டுக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நீங்கள்தான் தகுதிவாய்ந்தவர் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்."

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்

வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை

மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்

கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி

மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

## பிரதமராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி பிறந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, அரசியல்வாதியாக மாறுவதற்கு முன்னர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்கல்வி கற்றவர்.

எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

2011 ஆம் ஆண்டு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினராக இணைந்த பின்னர், இலவசக் கல்விக்கான போராட்டங்களில் கலந்து கொண்ட சமூக ஆர்வலரும் ஆவார்.

பல வருடங்கள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் வைத்தியராக பணியாற்றிய பின்னர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

ஹரிணி அமரசூரிய 2019 ஆம் ஆண்டு தேசிய புத்திஜீவிகள் அமைப்பில் இணைந்தார். அதே வருடம் ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவுக்காக பிரசாரம் செய்தார்.

12 ஆகஸ்ட் 2020 அன்று, இலங்கை நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் முதல் முறையாக நாட்டின் 16வது நாடாளுமன்றத்தில் நுழைவதற்காக தேசியப் பட்டியல் வேட்பாளராக தேசிய மக்கள் சக்தியால் அவர் பரிந்துரைக்கப்பட்டார்.

தேசியப் பட்டியல் வேட்பாளராகப் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்விசார் சிரேஷ்ட விரிவுரையாளராக ஹரிணி தனது பணியைத் தொடர முடியுமா என்ற சிக்கல் நிலையும் எழுந்தது.

இதனையடுத்து, திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகி நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் வேட்பாளராக

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு சமூகங்களில் இருந்து தனக்குக் கிடைத்த ஆதரவை ஒப்புக்கொண்ட அவர், இலங்கையின் முன்னேற்றத்திற்கான தனது அர்ப்பணிப்பு தொடரும் என்று கூறினார்.

"நீங்கள் சிங்களவர், தமிழ், முஸ்லிம், பர்கர் அல்லது வேறு எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நீங்கள் எந்த அரசியல் சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டாலும் சரி, உங்கள் நம்பிக்கையை நான் உணர்ந்திருக்கிறேன், அவற்றை என்னுடன் எடுத்துச் செல்கிறேன்" என்று பிரேமதாச தெரிவித்துள்ளார்.

"என்னை நம்பியதற்கு உங்கள் அனைவருக்கும் நன்றி, தகுதியான எதிர்காலத்திற்காக போராடுவதை நாங்கள் ஒருபோதும் நிறுத்த மாட்டோம்," என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# சாதாரண தர பெறுபெறுகள்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபெறுகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுக்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு 387,648 பாடசாலை பரீட்சார்த்திகளும் , 65,331

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அநுரவுடன் இணைந்து பணியாற்ற தயார்

## ஐ.எம்.எப். அறிவிப்பு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்காவுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் கடன் உதவியை வழங்கி வருகின்றது.

இந்தநிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு, புதிய அரசாங்கத்துடன் பணியாற்றத் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பில், விரைவில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுத் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலைக்கப்பட்ட பின்னர் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி ஜனாதிபதியால் ஒதுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

எந்த நேரத்திலும் பொதுத் தேர்தலை நடத்தத் தயார் எனவும் பொதுத் தேர் தலுக்காக மதிப்பிடப்பட்ட தொகை

சுமார் 11 பில்லியன் ஷரூபாவாக இருக்கும் எனவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## நேபாளத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காட்மாண்டுவில் நேபாளத்தின் கோடீஸ்வர வர்த்தகரான பினேர்ட் சௌத்திரி என்பவரின் விருந்தினராக ஆடம்பர விடுதி ஒன்றில் கோட்டாபயவும், அவரது மனைவியும் தங்கவைக்கப்பட்டிருப்ப தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காட்மண்டுவில் இரண்டு நாட்கள் தங்கியிருந்த பின்னர் அங்கிருந்து மற்றொரு நகரத்துக்குச் செல்வதற்கு அவர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எப்படியிருந்த போதிலும் சில நாட்களுக்கு அவர்கள் நேபாளத்திலேயே தங்கியிருப்பார்ள் என்று தெரிவிக்கப்படுகின்றது.







# கொக்கட்டிச்சோலையில் பாரம்பரிய முறைப்படி நடைபெற்ற ஏர்பூட்டு விழா









(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய ஏர்பூட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை விழாக் குழுத் தலைவர் க.சிவகுருநாதன் தலைமையில் பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி கோலாகலமாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு கு. சச்சிதானந்த குருக்கள், ஆலய குரு சிவஸ்ரீ வ. ஜோதிலிங்க குருக்கள் ஆசியோடு நிகழ்வு ஆலய காணியில் ஆரம்பமானது.

நிகழ்வில் அதிதிகளாக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், பட்டிப்பளை பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் கலாபூஷணம் ஞானபேரின்பம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்களான இ.மேகராசா( தலைவர் ), சி.கங்காதரன் (செயலாளர்), ச.கோகுலகிருஷ்ணன் (பொருளாளர்) ஆகியோர் ஏர் பூட்டு விழாவை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார்கள்.

நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச முன்னாள் தவிசாளர் அதிபர் சிவ.அகிலேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்களும் விவசாயப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# மட்டு. விவேகானந்தா அணிகளின் சாதனை











(அஸ்ஹர் இப்றாஹிம்)

மேசைப் பந்து விளையாட்டுக்கான எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற மட்டக்களப்பு முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட அணிகள் கிழக்கு மாகாண மட்ட சம்பியன்களானதோடு தேசிய மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் திருகோணமலையில் இடம்பெற்ற போது மட்டக்களப்பு முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட 18 வயதிற்கு உட்பட்ட. ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளும்,16 வயதிற்கு உட்பட்ட பெண்கள் அணியும் முதலிடம் பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டியில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி மூன்றாம் இடத்தையும் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தனிப்பட்ட வீராங்கனைகளுக்கான போட்டியில் இப் பாடசாலை மாணவி எம்.நிவேதிதா சம்பியனானதுடன் 20 வயதுக்குட்பட்டோருக்கான தனிப்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் கே.சுஜிரன் இரண்டாம் இடத்தையும் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கும் முனைக்காடு விவேகானந்த மகாவித்தியாலயத்திற்கும் முனைக்காடு கிராமத்திற்கும் பெருமையினை தேடிக்கொடுத்திருக்கின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2024இல் வெளியிடப்பெற்றது.